HDLIM I/II 2023/2024

NILIS

# நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ உயர்னிலை டிப்ளோமா
## (கற்கைநெறிக் குறியீடு: HDLIM I/II)

### 1) அறிமுகம்

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் நூலக மற்றும் தகவல் அறிவியலுக்கான தேசிய நிறுவனத்தினால் நடாத்தப் படுகின்ற நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ டிப்ளோமா அல்லது தொடர்புடைய வேறு டிம்ளோமா மட்டத்தில் சித்தியடைந்த எவரும் நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ உயர்நிலை டிப்ளோமா கற்கை நெறியினைத் தொடர முடியும். நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ உயர்நிலை டிப்ளோமாவானது இரு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியும் தலா ஒரு வருடத்திற்கான கற்கை நெறியாகும். எனவே, இருபகுதிகளும் மொத்தமாக இருவருடக் கற்றல் அர்ப்பணிப்பை வேண்டி நிற்கின்றன. நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ உயர்நிலை டிப்ளோமாவின் இரு பகுதிகளும் அதில் பங்குபற்றுபவர்களின் நூலகத் தகவல் முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறை அறிவு, மனப்பான்மை, திறன்களை விரிவுபடுத்த உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரு பகுதிகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்பவர்கள் SLQF இன் மட்டம் 4 க்குரிய தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வர்.

**2) இலக்கு குழு:** ஏலவே டிப்ளோமா தகுதியுடைய, பொது, பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வேறு எந்த வகை நூலகத்திலும் பணியாற்றுகின்ற அல்லது எந்த வகையான நூலகத்திலும் பணிக்குச் சேர்ந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள்.

### 3) நுழைவுத் தகமைகள்

| நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமா I (நூ.த.மு.உ.டி. I) | நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமா II (நூ.த.மு.உ.டி. II) |
|---|---|
| **பின்வரும் யாதாயினும் கற்கைநெறிகளில் சித்தி அடைந்திருத்தல்**<br>• நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவ டிப்ளோமா (நூ.த.மு.டி.)<br>• பொது நூலகர்வியலில் டிப்ளோமா (பொ.நூ.டி.)<br>• பாடசாலை நூலகர்வியலில் டிப்ளோமா (பா.நூ.டி.) | நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவ உயர் டிப்ளோமா I (நூ.த.மு.உ.டி. I) சித்தி அடைந்திருத்தல் |

### 4) கற்றல் விளைவுகள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்ததன் பின்னர், பங்கேற்பாளர்கள் பின்வரும் திறன்களைப் பெறுவர்:

- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை வினைத்திறனாக நிர்வகித்தல்
- ஊடகத்திற்கான தகவலின் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொள்ளுதல்
- தகவல் முகாமைத்துவத்தில் தகவல் கட்டமைப்புக்கள் மற்றும் முறைமைகளின் பயன்பாட்டினைப் புரிந்துகொள்ளுதல்
- நூலகங்கள் மற்றும் தகவல் அறிவியல் துறைகளில் அடிப்படை ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல்

### 5) கற்கைநெறி உள்ளடக்கங்கள்

| நூ.த.மு.உ.டி. I | நூ.த.மு.உ.டி. II |
|---|---|
| 1. நூலகம் மற்றும் தகவல் தொழில்வாண்மை அபிவிருத்தி | 1. நூலகம் மற்றும் தகவல் நிலைய முகாமைத்துவம் |
| 2. சேகரிப்பு முகாமைத்துவம் | 2. தகவல் அமைப்புக்களுக்கான கட்டமைப்பு |
| 3. வெகுசன ஊடகத்திற்கான தகவல் | 3. தகவல் முகாமைத்துவம் -iii |
| 4. தகவல் முகாமைத்துவம் -ii | 4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - iii |
| 5. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் -ii | 5. நூற்பட்டியல் ஒழுங்கமைப்பு - iii |
| 6. நூற்பட்டியல் ஒழுங்கமைப்பு -ii | 6. தகவல் முறைமை முகாமைத்துவம் |
| 7. தகவல் முறைமை முகாமைத்துவம் | 7. ஆராய்ச்சி முறை |
| 8. ஆராய்ச்சி முறை | 8. நூலக தொழில் வாண்மையாளருக்கான ஆங்கிலம் - iii |
| 9. நூலக தொழில்வாண்மையாளருக்கான ஆங்கிலம் - ii | 9. திட்டம் |
| 10. திட்டம் | |

6) **கற்கைநெறிக் காலம்:**

| நூ.த.மு.உ.டி. I | நூ.த.மு.உ.டி. II |
|---|---|
| **ஒரு வருடம்** | **ஒரு வருடம்** |

7) **மொழி மூலம்:** சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம். (போதிய எண்ணிக்கையான மாணவர்கள் சேரத்துக்கொள்ளப்பட்டால் மாத்திரமே எந்த ஒரு மொழியிலும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படும்).

8) **கற்றல் முறை:** மறு அறிவித்தல் வரை சகல வகுப்புகளும் இணைய இயங்கலை/ நிகழ்னிலை வழியாகவே நடாத்தப் படும். .

9) **மதிப்பீட்டு முறை**

வகுப்பறை ஒப்படைகள், அரையாண்டு இறுதி எழுத்துப் பரீட்சைகள் மற்றும் செயற்திட்ட அறிக்கை மூலம் மாண்வர்கள் மதிப்பீடு செய்யப்படுவர்.

10) **நூலகம் மற்றும் தகவல் முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமாவினைப் பெற்றுக் கொள்வதற்கு**

ஒப்படைகளில் திருப்திகரமான புள்ளிகள் பெறுவது தொடக்கம் அரையாண்டு இறுதி எழுத்துப் பரீட்சைகளின் ஒவ்வொரு பாடத்திலும் நூற்றுக்கு 50% வீதம் புள்ளிகள் எடுப்பதுடன் ஒரு திட்ட அறிக்கை ஒன்றையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்ய வேண்டும்.

11) **கற்கைநெறிக் கட்டணங்கள்**

| விபரம் | HDLIM I | HDLIM II |
|---|---|---|
| முதல் தவணை (பதிவின் போது ) | Rs. 21,300.00 | Rs. 27,600.00 |
| இரண்டாம் தவணை (முதலாம் தவணைப் பரீட்சைக்கு முன்னதாக (6 மாதத்தினுள்)) | Rs. 17,000.00 | Rs. 22,500.00 |
| **மொத்த கட்டணத் தொகை** | **Rs. 38,300.00** | **Rs. 50,100.00** |

12) **விண்ணப்ப முடிவுத் திகதி:** 2023 பிப்ரவரி 28

13) **கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி:** மார்ச் 2023

14) **விண்ணப்பிக்கும் செயல்முறை:**

- விண்ணப்பப் படிவத்தை எமது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கவும் (www.nilis.cmb.ac.lk)
- தெளிவாகப் படிவத்தை நிரப்பவும்
- ரூ. 300 இனை விண்ணப்ப நடைமுறைக்காக **மக்கள் வங்கி, திம்பிரிகஸ்யாய கிளையில்** கணக்கு இலக்கம் **086100101191736** இற்கு வைப்புச் செய்யவும். விண்ணப்பப் படிவத்தின் தரப்பட்ட கூட்டினுள் அசல் ரசீதை ஒட்டவும்.
- பிறப்புச் சான்றிதழ், GCE/OL, GCE/AL சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை (NIC) என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.
- கடித உறையின் இடது மேல் மூளையில் கற்கை நெறி குறியீட்டை எழுதவும்.
- விண்ணப்பத்தையும் ஏனைய இணைப்புகளையும் பினவரும் முகவரிக்கும் அனுப்பவும்

Senior Assistant Registrar
National Institute of Library & Information Science (NILIS)
University of Colombo, Colombo - 07
Colombo 03”